**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

2025 ம் ஆண்டு **மார்ச் மாதம் 21-ம் தேதி** பிரதிவாதி தரப்பு சாட்சி **பி.வா.சா.1-ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.11 /2024**

**பி.வா.சா:-1 நதியா**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி(வாதி தரப்பில்):-**

சாமியப்பன் எனக்கு மாமனார் ஆவார். எனது மாமனார் எழுதியதாக சொல்லப்படும் பி.வா.த.சா.ஆ.6 உயில் சாசணமானது என் கைவசம்தான் இருந்தது என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் என் மாமனார் சாமியப்பன் உயில் சாசணம் எழுதிய விவரம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எதிர் வழக்குரையில் உயில் சாசணத்தை பற்றிய விவரம் தெரிவித்த உடன் வாதி தரப்பில் உயில் சாசணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யச்சொல்லி மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான். 17.10.2016ம் தேதியில் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசல் உயில் சாசணமானது கடந்த 13.09.2023ம் தேதியில் 7 வருடங்கள் கழித்துதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 7 வருடங்களாக அசல் உயில் சாசணம் தாக்கல் செய்யாததற்கு காரணம் உயில் சாசணம் பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்பதால்தான் என்றால் சரியல்ல. சாமியப்பன் என்பவரின் கையெழுத்து உள்ள வேறு ஆவணங்கள் ஒப்படைக்கச்சொல்லி கேட்டார்கள் என்றால் சரிதான். வேறு ஆவணங்கள் ஒப்படைக்கவில்லை என்றால் சாமியப்பன் கையெழுத்து உள்ள வேறு ஆவணங்கள் இல்லாததால் ஒப்படைக்கவில்லை. சாமியப்பன் என்பவரது போலியானது என்றும், அதை கையெழுத்து நிபுணர் மூலமாக பரிசோதனை செய்ய

வேண்டும் என்று வாதி தரப்பில் மனு கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த மனுவை நாங்கள் கடுமையாக ஆட்சேபணை செய்தோம் என்றால் சரிதான். என் மாமனார் சாமியப்பன் கையெழுத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். கையெழுத்து நிபுணர் சாமியப்பன் என்பவரது கையெழுத்தை பரிசோதனை செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் ஆட்சேபணை செய்தோம் என்றால் சரியல்ல. சாமியப்பன் எப்போது இறந்தார் என்றால் என் திருமணத்திற்கு முன்பாகவே 2006ம் வருடம் இறந்துவிட்டார். அவர் மாரடைப்பால் இறந்துவிட்டதாக சொன்னார்கள். 2004ம் வருடம் சாமியப்பனுக்கு ஒரே மகன்தான் இருந்தார் என்றும் சொத்தை பாதுகாப்பு செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் எனக்கு தெரியாது. வாதி சாமியப்பனின் ஒரு மகள் ஆவார். வாதிக்கு நல்ல முறையில் சீர், சிறப்புகள் செய்து திருமணம் செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டிருந்தால் அது பொய் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கண்ணம்மாள் என்பவருக்கு சொத்து போகக்கூடாது என்று அவரது கணவருக்கு விருப்பம் இருந்திருக்காது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கணவர் மனைவிக்கு சொத்து போகக்கூடாது என்று நினைப்பது அசாதாரணமான நிகழ்வு என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.6 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது சாமியப்பனுக்கு பூர்வீக சொத்து என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.6 ஆவணத்தில் சாமியப்பனின் மனைவிக்கு ஏன் சொத்து கொடுக்கவில்லை என்பதற்கான காரணங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உயில் சாசணத்தில் எவ்வளவு சொத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சாமியப்பனுக்கு பாத்தியப்பட்ட மூன்றில் ஒரு பாகத்தை பொறுத்து அவரது மகன் பெயருக்கு உயில் சாசணம் எழுதி உள்ளார். மீதமுள்ள இரண்டு பாகமானது சாமியப்பனின் மகளுக்கு ஒரு பாகமும், மகனுக்கு ஒரு பாகமா என்றால் மாரப்ப கவுண்டர், மலையம்மாள் ஆகியோர்கள் மூன்றில் ஒரு பாகம் என்று ஆவணம் எழுதியுள்ளார்கள், அதன்படி சாமியப்பனும் மூன்றில் ஒரு பாகம் என்று ஆவணம் எழுதியுள்ளார். பி.வா.த.சா.ஆ.6 உயில் சாசணத்தில்

**Copy of Deposition**

சாமியப்பனுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்ட மூன்றில் ஒரு பாகம் போக மீதமுண்ண 2/3 பாகம் யாருக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. உயில் சாசணத்தின்படி சொத்தானது என் கணவருக்கு பிறகு தற்போது என் வசம் உள்ளது. பி.வா.த.சா.ஆ.6 உயில் சாசணத்தில் கண்டுள்ள சொத்தை பொறுத்து எனது கணவர் எதாவது ஆவணம் எழுதியுள்ளாரா என்றால் என் பெயருக்கு பி.வா.த.சா.ஆ.12 ன்படி செட்டில்மென்ட் ஆவணம் எழுதியுள்ளார். பி.வா.த.சா.ஆ.12 செட்டில்மென்ட் ஆவணத்தில் பி.வா.த.சா.ஆ.6 உயில் சாசணத்தில் கண்டுள்ள மூன்றில் ஒரு பங்கை பொறுத்துதான் சொத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.12 செட்டில்மென்ட் ஆவணம் எழுதிய விவரம் எனக்கு நேரில் தெரியும். பி.வா.த.சா.ஆ.12 செட்டில்மென்ட் ஆவணம் எழுதிய ஆவண எழுத்தர் இராஜேந்திரன் என்பவர் எங்களுக்கு எத்தனை ஆவணங்கள் எழுதியுள்ளார் என்றால் தெரியாது, எங்கள் குடும்பத்திற்கு அவர்தான் பத்திரங்கள் எழுதுவாரா என்றாலும் தெரியாது. மேற்படி பத்திர எழுத்தார் கொரானா காலத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.4 மற்றும் 5 உயில் சாசணமானது பத்திர எழுத்தர் இராஜேந்திரன் என்பவரால் எழுதப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது, பத்திரத்தை பார்த்தால்தான் தெரியும். பி.வா.த.சா.ஆ.6 உயில் சாசணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் வேலுச்சாமி மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். பி.வா.த.சா.ஆ.6 உயில் சாசணத்தை பற்றிய விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2010ம் வருடம் தெரிய வந்தது. பி.வா.த.சா.ஆ.12 தான செட்டில்மென்ட் ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் வேலுச்சாமி என்பவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். மற்றொரு சாட்சி யார் என்று ஆவணத்தை பார்த்தால்தான் சொல்ல முடியும். நான் தாக்கல் செய்துள்ள எல்லா ஆவணங்களிலும் வேலுச்சாமி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.6 உயில் சாசணமானது பின்னிட்டு வாதிக்கும், அவரது தாயாருக்கும் போகக்கூடாது என்ற எண்ணத்தில்

**Copy of Deposition**

பி.வா.த.சா.ஆ.12 செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் போலியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் மாமனார் இறக்கும்போது அவருக்கு என்ன வயது என்றால் 60 வயதிற்கு மேல் இருக்கும். பி.வா.த.சா.ஆ.6 உயில் சாசணப்படி மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமி எழுதியுள்ளார்கள் என்றால் தெரியாது. பி.வா.த.சா.ஆ.12 தான செட்டில்மென்ட் ஆவணம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமியை பொறுத்து எழுதப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் சொல்ல முடியும். பி.வா.த.சா.ஆ.2 ஆவணப்படி கிரையம் கொடுக்கப்பட்ட சொத்து தற்போது யார் வசம் உள்ளது என்றால் பாபு, ஈஸ்வரன் ஆகியோர்கள் வசம் உள்ளது. மேற்படி கிரையமானது எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமியை பொறுத்தது என்ற விவரம் தெரியாது. மேற்படி கிரையம் கொடுக்கப்பட்ட சொத்தானது எந்த ஆவணங்களின்படி பாத்தியப்பட்ட சொத்து என்றால் தெரியாது. பி.வா.த.சா.ஆ.2 ஆவணப்படி கிரையம் கொடுத்த பூமியானது பி.வா.த.சா.ஆ.4 முதல் 6 வரையிலான உயில் சாசணத்திற்கு கட்டுப்படாத பூமி என்றால் சரியல்ல, கிரையம் கொடுத்த பூமியானது மேற்படி உயில் சாசணப்படி என் கணவர் சண்முகத்திற்கு மட்டுமே பாத்தியப்பட்ட பூமியா என்றால் ஆமாம். கிரையம் வாங்கியவர்கள் எல்லோரும் கையெழுத்து போடவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் எல்லோரும் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். மேற்படி பி.வா.த.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் சொத்திற்கு சம்பந்தப்படாக 5 நபர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் என் கணவரை தவிர மீதமுள்ள 5 நபர்களுக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று எழுதப்பட்டுள்ளதா அல்லது இல்லையென்று எழுதப்பட்டுள்ளதா என்றால் உரிமை இல்லை என்றுதான் எழுதப்பட்டுள்ளது. கிரையம் வாங்கியவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் என் கணவரை தவிர மற்ற 5 பேர்களும் கையெழுத்து போட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.2 ஆவணம் 9வது பக்கத்தில் எங்களுக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் கொடுப்பதாக கண்டு வாசகம்

எழுதப்பட்டுள்ளது என்றும், அந்த வாசகம் தவறா என்றால் தவறுதான். பி.வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் பி.வா.த.சா.ஆ.4 முதல் 6 வரையிலான உயில் சாசணம் மற்றும் செட்டில்மென்ட் ஆவணங்களை பற்றி பின்னிட்டு யாரும் கேள்வி கேட்கக்கூடாது என்பதற்காக மேற்படி பி.வா.த.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் வாசகங்களை உட்புகுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.2 கிரைய ஆவணம் எழுதிய தேதியிலேயே வாதியின் பெயருக்கு ஒரு கிரைய ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நாங்கள் மறுக்கவில்லை, அந்த சொத்தை வாதிதான் அனுபவித்து வருகிறார். அதன் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஆகும். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக வேறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் கணவர் வாதி ஜோதிமணிக்கு கிரையம் கொடுத்த ஒரு ஏக்கர் பூமியில் என் மகளுக்கும் பாகம் இருப்பதாக ஈரோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு எண்.189/2023 ஆகும். நான் மேற்படி வழக்கை எனது மைனர் மகளுக்காக வாதி மற்றும் 3ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் எல்லாம் வாதிக்கும், எங்களுக்கும் பொதுவாகத்தான் உள்ளது என்றும், வாதிக்கு சொத்துக்கள் போகக்கூடாது என்பதற்காக போலியான ஆவணங்களை உருவாக்கி எதிர் வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 2002ம் வருடம் வாதி திருமணம் செய்து கொண்ட காலத்தில் இருந்து வாதிக்கு சொத்துக்கள் போகக்கூடாது என்று ஒவ்வொரு ஆவணமும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தில் பாத்தியம் இல்லை என்று கூறுவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தான செட்டில்மென்ட் ஆவணங்கள் எல்லாம் பெயரளவிலானவை என்றும், அவை நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

**Copy of Deposition**

| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
|---|
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>(Sd xxx M. Ramachandran)<br>Subordinate Judge,<br>Kodumudi |